1982 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்த அடிப்படையிலேதான் அரசாங்கம் இதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்துக் கொண்டிருக்கின்ற சென்னை நகர மக்களின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க பாதாள இரயில் விடும் திட்டம் என்னவாயிற்று? அதுபற்றி மத்திய அரசு என்ன சொல்கிறது? அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி பஸ்களைப் பற்றியது; பாதாள இரயிலைப் பற்றியது அல்ல.

பஸ் உரிமையாளர்கள் ஸ்பேர் பஸ் வைத்துக் கொள்வதற்கான அரசு அனுமதி.

*வினா எண். 318—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ் உரிமையாளர்களுக்கு ஒரு ஸ்பேர் பஸ் (Spare Bus) வைத்துக் கொள்ள அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ் உரிமையாளர்களுக்கு ஒரு ஸ்பேர் பஸ் வைத்துக் கொள்ளத் தடை ஏதும் இப்பொழுது இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பஸ் சம்பந்தமாகக் கொடுக்க வேண்டியதில், தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அது சம்மந்தமாக அரசு என்ன செய்திருக்கிறது? அப்படிக் கொடுக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுக் காலமாகத் தனியாருக்கே நாம் பேருந்து உரிமங்கள் வழங்கவில்லை. அப்படி வழங்கப்பட்டிருந்தால் 18 சதவீதம் நிச்சயமாக ஒதுக்கப்பட்டிருக்கும். எனவே, வழங்கப்படாத நேரத்தில் ஏன் ஒதுக்கவில்லை என்ற கேள்வி எழாது. அப்படி வழங்கப்படும் நேரத்தில் நிச்சயமாக அவர்களுக்கும் ஒதுக்கப்படும்.

திரு. கே. நாராயணசாமி : தலைவரவர்களே, ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ் உரிமையாளர்கள் ஸ்பேர் பஸ் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அதை இலாபகரமாக நடத்த இயலாமல், பஸ்ஸை சரண்டர் செய்துவிடுகிறார்கள். எனவே, ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ் உரிமையாளர்கள் ஸ்பேர் பஸ் வைத்திருந்தால் அவர்களுக்கு டெம்பரரி ரூட் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படிப் பட்ட கோரிக்கையைப் பல நேரங்களிலே சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இந்தத் தொழிலில் நஷ்டம் ஏற்படுகிறது என்று அரசாங்கத்திடம் அந்தத் தொழிலை நடத்துபவர்கள் ஒட்டுமொத்தமாகச் சொல்வதால் அரசாங்கம் தீரப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதில் இன்னும் முடிவெடுக்கவில்லை. அந்தப் பரிசீலனையில் அரசாங்கம் எப்படி வேண்டு மானாலும் முடிவெடுக்கலாம். அந்தக் கோரிக்கையைப் பற்றிப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதோடு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ் வைத்துக்கொண்டு தனியார் நடத்துவது என்பதில் அது தொழிலாளர்களையும் பாதுகாக் காது; முதலாளிகளையும் பாதுகாக்காது. எனவே, குறைந்த பட்சம் ஐந்து பஸ்கள் வைத்திருந்தால்தான் இன்டஸ்ட்ரி மாதிரி நடத்துவதற்கு வாய்ப்பிருக்கும். எனவே, ஸ்பேர் வண்டிகள் வழித்தடங்களில் ஓடும் அளவிற்கு டெம்பரரியாக—நிரந்தர மற்ற அனுமதியை டெம்பரரி பர்மிட்டை வழங்குவதற்கு சர்க்கார் கொள்கை பூர்வமாக ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரு வினாவின்போது கொள்கைப்பற்றிக் கேட்பதும், அதற்குக் கருத்துக்களைச் சொல்வதும் அவ்வளவு சாத்தியமல்ல. இருந்தாலும் ஏற்கனவே ஐந்து பேருந்துகளை வைத்துக் கொள்ளலாம் என்று உரிமை கொடுத்திருக்கிறோம். ஸ்பேர் பஸ்களுக்கு டெம்பரரி பர்மிட் கொடுக்க முடியுமா என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னேன், கோரிக்கை வந்திருக்கிறது, பரிசீலித்துக் கொண் டிருக்கிறோம். உங்களுடைய உணர்வுகளையும் அதோடு இணைத்துப் பரிசீலிக்கும் என்று சொன்னேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது தாழ்த்தப் பட்ட மக்கள்—எக்கனாமிக்கலி மிகவும் பேக்வார்டாக இருப்பவர் களுக்கு ஒன்றரை ஆண்டுக் காலமாக ஏன் இந்தச் சலுகையை அரசாங்கம் கொடுக்கவில்லை என்று நான் அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, தனியார் யாருக்குமே பேரூந்து உரிமங்கள் வழங்கப்படவில்லை. எனவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் நாம் வழங்காமல் தனியாக நிறுத்திவிடவில்லை. ஒட்டுமொத்தமாகத் தனியாருக்கு ஒன்றரை ஆண்டுக் காலமாகக் கொடுக்கவில்லை. ஆகவே, 18 சதவீதம் கொடுக்க முடியாமல் இருந்தது. கொடுக்க ஆரம்பித்தால் அந்த வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும். எனவே, மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களுக்குக் கொடுக்காமல் நிறுத்தவில்லை. எல்லோருக்கும் கொடுக்காமல் நிறுத்தியிருக்கிறோம்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுப் பேருந்துகள் பல் வேறு தடங்களில் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த வண்டிகளில் எதிலாவது, ஒரு டயர் பங்க்ச்சர் ஆனால், அந்த வண்டியை மறுமுறை எடுப்பதற்கு 4 அல்லது 5 மணி நேரம் ஆகின்றது. அதனால், ஒரு நாளே போய்விடுகிறது. ஆகவே, எல்லா வண்டிகளுக்கும் ஸ்டெப்னி டயர், ஜாக்கி, ஸ்பேனர் மூன்றும் கொடுக்க அரசு முன்வருமா? இப்பொழுது பெருத்த நட்டம் ஏற்படுகிறதே, அதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த மூல வினா ஸ்பேர் பஸ்களைப் பொறுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஸ்பேர் பார்ட்ஸூக்குப்போய் விட்டார், அவ்வளவுதான்.

தமிழ்நாட்டில் உலகவங்கி மூலம் செயல்பட்டுவரும் நல்வாழ்வுத்துறைக்கான திட்டங்கள்.

*வினா எண். 319— திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கியின் மூலம் நல்வாழ்வுத் துறைக்கு ஏதாவது திட்டங்கள் உள்ளனவா?

(ஆ) அதன் செயல்முறை என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ), (ஆ) உலக வங்கியின் மூலம் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் தமிழ் நாட்டில் செயல்படுவதில் நல்வாழ்வுத் துறையும் பங்கு ஏற்கிறது.

இத் திட்டம் 1980 நவம்பரிலிருந்து மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் முன்னோடித்திட்டமாக (Pilot Project) செயல்படுத்தப்பட்டுவருகிறது. இவ்வோ